**செய்தி வெளியீடு எண்: 892** **நாள்: 12.10.2010.**

<u>செய்தி</u>

சென்னை–5, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இக்கல்வி நிலையத்தில் தொழிலாளர் மேலாண்மையில் சென்னை பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முழுநேர இளநிலை பட்டம் பி.ஏ. – (எல்.எம்) 3 ஆண்டுகள், முதுகலை பட்டம் எம்.ஏ. – (எல்.எம்) 2 ஆண்டுகள் மற்றும் ஓர் ஆண்டு பகுதி நேர பி.ஜி.டி.எல்.ஏ. பட்டய படிப்பும் நடத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் மேலாண்மையில் முழுநேர மற்றும் பகுதிநேர ஆய்வறிஞர் ஆராய்ச்சி (பிஎச்.டி.) மையமாக சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனைத்தவிர தொழிலாளர் சட்ட விதிகள் தொழில் உறவு சம்பந்தமாக பல்வேறு பயிற்சிகள் / கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி படிப்புகள் மற்றும் பயிற்சிகளை நடத்திடவும், இக்கல்வி நிலைய விதிகளின்படி ரூ.37400–67400 + கல்வி தர ஊதியம் ரூ.9000/– மற்றும் இதர படிகள் அடங்கிய ஊதிய விகிதத்தில் ஒரு பேராசிரியர் தேவைப்படுகிறது. இந்த பேராசிரியர் பதவிக்கு Sociology / Social Work / Psychology / Economics / Industrial Relations / Business Management / Commerce என்ற படிப்புகளில் ஆய்வறிஞராக இருக்க வேண்டும். குறைந்தது 10 புத்தகம் / ஆய்வறிக்கைகள் / திட்ட அறிக்கைகள் தயார் செய்து வெளியீடு செய்திருக்க வேண்டும். பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் 10 வருடங்கள் ஆசிரியராக பணியாற்றிய முன் அனுபவம் இருக்க வேண்டும். அல்லது பல்கலைக்கழகம் / தேசிய நிலை நிறுவனங்கள் / தொழிற்சாலைகளில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வறிஞர்களுக்கு ஆராய்ச்சி ஆசிரியராக வழிநடத்த தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தியதில் பங்கு, புதிய முறையில் பாடத்திட்டம், தொழில்நுட்ப கல்விக்கு நடுவராயிருந்து இணக்குவித்தவராக இருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மானியக்குழு விதி இணைப்பு III–ல் நிர்ணயித்தபடி Academic Performance Indicator (API) Performance Based Appraisal System (PBAS)ன்படி குறைந்தபட்ச மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டு.. அல்லது மேற்படி கல்வித்தகுதியில் தலைசிறந்த வல்லுநராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் சட்டக்கல்வி மற்றும் தமிழ் அறிவும் பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

விருப்பம் உள்ளவர்கள் இச்செய்தி பிரசுரித்த 15 நாட்களுக்குள் இயக்குநர், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், 5, காமராஜர் சாலை, சென்னை– 5 அவர்களுக்கு முழு விவரத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**